மாநில அரசும் ஏற்றுக்கொண்டது. இங்கே அதற்குப் பிறகு, 27 ஆம் தேதி திருவிழா நடைபெறுகிறது என்று ஒரு குறிப்பு தரப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களும் என்னிடத்திலே தெரிவித்தார்கள். அதற்குப்பிறகு நாங்கள் விசாரித்த பிறகு 27 ஆம் தேதி இரவு தெப்ப உற்சவம் நடைபெறுகிறது என்றும், பகலிலே ஒன்றும் இல்லை என்றும் ஒரு குறிப்பு மட்டும் வந்தது. அதற்குப் பிறகு அங்கே இருக்கிற அரசியல் கட்சி உறுப்பினர்களும் மற்றவர்களும் 21 ஆம் தேதியிலே இருந்து தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறுவதன் காரணமாகவும், மக்கள் பல்வேறு பகுதியிலே இருந்து 23, 24 ஆம் தேதிகளில் ஏராளமாக வருவதன் காரணமாககூட்டங்கள் கூடும் என்றும், தேர்தலிலே ஈடுபடுகின்ற கட்சிக்காரர்கள் எல்லாம் இறுதிக் கட்டத் தேர்தலிலே ஈடுபடுகின்றது அந்த 23, 24 ஆம் தேதிதான் என்றும் 25 ஆம் தேதி 5 மணியோடு தேர்தல் முடிந்துவிடுகிறது, 26 ஆம் தேதி ஓய்வு விடப்படுகிறது. ஆகவே இதைத் தள்ளி வைக்கப்படுவது நல்லது என்ற கருத்தை அரசியல் கட்சித் தலைவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்கள் தெரிவித்ததற்கு இணங்க தேர்தல் கமிஷனுக்கு இந்த கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆகவே, தேர்தல் கமிஷனுக்கு நாம் தெரிவித்தபோதும், கொஞ்சம் அவகாசம் கொடுத்து, மார்ச் 3 ஆம் தேதி வைத்துக் கொள்ளலாம் என்றுதான் நாம் குறிப்பிட்டு இருந்தோம். ஆனால் தேர்தல் கமிஷன் கேரளாவிலே 1 ஆம தேதி அன்று என்று மாற்றி வைப்பதன் காரணமாக, தமிழகத்திலேயும் 1 ஆம் தேதி மாற்றி வைப்பது நல்லது என்ற குறிப்பு அரசுக்கு தெரிவித்ததன் காரணமாக மார்ச் 1 ஆம் தேதி மாற்றி வைத்திருக்கிறோம். அது எல்லோருக்கும் சௌகரியமா இருக்கும் என்ற அடிப்படையில்தான் வைக்கப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன் அறிவிப்புகள்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உரிமைப் பிரச்னை சம்பந்தமாக ஒரு நோட்டிஸ் கொடுத்து இருந்தேன் 3 ஆம் தேதி மாண்புமிகு முதல்வரவர்கள் இங்கே சொன்ன சில பேச்சுவள் பேக்ட்ஸ் சம்பந்தமாக சில விஷயங்களை சொன்னது தவறு என்ற வகையிலே சொல்லக்கூடாது என்ற வகையிலே வழக்கறிஞர்கள் சிலர் அறிக்கை விட்டிருக்கிறார்கள், அது சட்டசபயினுடைய உரிமையை மீறியது. சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யக்கூடிய கடமையிலிருந்து அது தடுக்கிறது என்று வகையிலே நான் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு). (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கொடுத்த உரிமைப் பிரச்னை என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு, உரிமைப் பிரச்னையை எதற்காக கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்த காரணத்தால் நான் கொடுத்துள்ள உரிமைப் பிரச்னை பற்றியும் (குறுக்கீடு) . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்று ஆரம்பித்து திருச்செந்தூர் தேர்தல் பற்றி துரைமுருகன் கேட்டார். அதைப்போன்று அவர்கள் விவரங்களைச் சொல்லி விட்டார்கள். நீங்கள் வேண்டுமானால் சொல்லுங்கள்.

(முற்பகல் 10-50)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, போலீஸ் உயர் அதிகாரி மோகன்தாஸ் அவர்கள் அதிகார துஷ்பிரயோகம் செய்து உறுப்பினர்களின் உரிமையை பாதிக்கும் வகையில் பேச்சை டேப் செய்தார் என்று ஒரு உரிமைப் பிரச்னை நான் கொடுத்து இருக்கிறேன். நாளைக்கு அதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'நாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று கட்டளையிடுகின்ற வகையில் கூறக்கூடாது. உங்கள் கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு நான் வரவில்லை.

திரு. ரா. உமாநாத் : எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தான் கேட்டார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழுக்கு நீங்கள் விளக்கம் சொல்லி நான் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற அவசியம் இல்லை. நான் நிரம்பத் தமிழ் படித்து இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். ஒரு திருத்தம்—அதை ஒரு 'ரிக்வெஸ்ட்டாகத்தான்' கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரொம்ப நன்றி.

(குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்)

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் கூட ஒரு உரிமைப்பிரச்னை கொடுத்து இருக்கிறேன். வறட்சி பற்றிய அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது சம்பந்தமாக ஆளுநர் உரையில் தவறான தகவல் இந்த அரசு தந்து இருக்கிறது என்பதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன். அது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

(கூச்சல், குழப்பம், குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரப்பெற்றுள்ள உரிமைப் பிரச்னைகள் என்னுடைய ஆய்வில் உள்ளன. என்னுடைய ஆய்வு முடிந்தபின் அது குறித்துத் தீர்மானிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கான அடிப்படை நோக்கம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உங்களிடமிருந்து விளக்கம் தெரிந்து கொண்டு நான் சபையை நடத்த வேண்டிய நிலையில் இல்லை. ஆகவே, இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படவில்லை என்று திருப்பி அனுப்புகின்ற நேரத்தில், எந்தக் காரணத்தினால் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று எழுத்து மூலமாக அனுப்புவது வழக்கம். ஆனால் எந்தவிதமான காரணமும் சொல்லாமல், பேரவைத் தலைவர் அனுமதி மறுத்துள்ளார் என்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது சரிதானா என்பதைத்தான் அவர் அறியவிரும்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அறைக்கு வந்தால், இதைப் பற்றி விளக்கமாகப் பேசலாம்.

திரு. கே. குப்புசாமி : தலைவர் அவர்களே, பிப்ரவரித் திங்கள் 2-ம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்த சில கருத்துக்கள் மீது அதை மறுத்து 4-ஆம் நாள் சென்னை உயர்நீதி மன்றத்தில் உள்ள சில வழக்குறைஞர்கள் முதலமைச்சரின் பேச்சின்மீது தவறான ஒரு எண்ணத்தைத் தருகின்ற வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது குறித்து நீங்கள் அளித்துள்ள உரிமைப் பிரச்னை குறித்துத்தானே சொல்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிபதிக்கு போலீஸ் பாதுகாப்பு நாங்கள் தான் கொடுத்து இருக்கிறோம் என்று நீதிபதிகளை மிரட்டுகின்ற வகையில் பேசியிருக்கிறார். அவர் எப்படிப் பேசலாம். நாங்கள் அதற்கு பதில் சொல்லவேண்டாமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே போலீஸ் பாதுகாப்பு நீதிபதிகளுக்குத் தரப்படுகிறது என்று தான் பேசியிருக்கிறாரே தவிர 'இன்டைரக்ட்டாக' அவர்களை மிரட்டுகின்ற வகையிலோ, கொடுக்கக்கூடாது என்றோ முதலமைச்சர் அவர்கள் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்தகைய பிரச்னைகள் குறித்து மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் வருகின்றபோது உறுப்பினர்கள் பேசினால், முதலமைச்சர் அவர்களிடமிருந்து விளக்கம் பெறமுடியும்.